## <u>கம்பம் நகராட்சி</u>

**2018–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் (28.03.2018) புதன் கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

### கூட்டப் பொருட்கள்

**1.** இந்நகராட்சிக்கு பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் எண். TN 60 X 0500 டம்பர் பிளேசர் லாரிக்கு டயர்கள் தேய்ந்துவிட்டதால், மேற்படி வாகனத்திற்கு 8/25/16 சைஸ் அப்பலோ (Appolo) கம்பெனி பட்டன் டயர்கள் நான்கு புதியதும், ரன்னிங் டயர் இரண்டும், ஆறு புதிய டியூப் மற்றும் ஆறு பிளாப்களை புதியது வாங்கி வண்டியில் மாட்டி பொருத்தி தருவதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.**90,000**/-ஐ (ரூபாய் தொண்ணூராயிரம் மட்டும்) மன்றத்தின்அனுமதிக்குவைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1278/2018/எச்1)

**2.** இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் வாகனம் TN 60 X 0500 -இல் பேட்டரி பழுதடைந்துவிட்டது. எனவே மேற்படி பேட்டரி **100** ஆமஸ் **12** வோல்டேஜ் உள்ள புதிய பேட்டரியும், மெயின் வயர், எர்த் வயர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகைரூ.**10,000**/-ஐ மன்றத்தின்அனுமதிக்குவைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1277/2018/எச்1)

**3.** கம்பம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திலுள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 27.03.2018–ஆம் தேதியன்று மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் பெயர் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்) | 2017–2018 ஆம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. | மூன்றாண்டு சராசரி தொகை ரூ. | கூடுதல் | குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.சி.எம். ஆனந்தன், கம்பம் | 5,97,100 | 5,96,400 | – | 700 | – |
| | | | | 567967 | 29133 | |
| 2 | திரு.எம்.ஏ. பாஸ்கரன், கம்பம் | 437500 | 596400 | – | – | 158900 |
| | | | | 567967 | – | 130467 |

ஏலம் கோரி யாரும் பொறுப்பு தொகை செலுத்தப்படவில்லை

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு** : மேற்கண்ட இனத்திற்கு மூன்று முறை ஏலம் கோரப்பட்டது. இரண்டு முறை யாரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. மூன்றாவது முறையாக மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.எம். ஆனந்தன் என்பவர் சமர்ப்பித்த உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் கடந்த ஆண்டு குத்தகை தொகையை விட கூடுதலாகவும் உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். (ந.க.எண்.3207/2017/பி2) |
| **4.** | கம்பம் நகராட்சி வார்டு எண்.20, புதிய பேருந்து நிலையம் கீழ் வடக்கு 4வது சந்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக 1998 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட பொது கழிப்பறை தற்போது மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளதாலும், மேலும், அப்பகுதியில் வசித்து வரும் பொதுமக்கள் அனைவரும் அவர்அவர்களுக்கு சொந்தமான தனி நபர் கழிப்பறையினை பயன்படுத்தி வருவதாலும் மேற்படி நகராட்சி பொது சமுதாய கழிப்பிடக் கட்டிடத்தினை அப்புறப்படுத்திட கோரி 21.12.2016ம் தேதிய விண்ணப்பத்தில் மேற்படி பகுதியில் வசித்துவரும் பொது மக்கள் மனு அளித்துள்ளனர்.<br>மேற்படி பொது மக்கள் கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பறையின் தற்போதைய நிலை குறித்து நகராட்சி பொறியாளரால் ஆய்வு மேற்கொண்டதில் 10.50 மீட்டர் x 1.50 மீட்டர் அளவிலான பொது கழிப்பிட கட்டிடம் பொது மக்கள் உபயோகத்திற்கு தகுதியற்ற நிலையில் கட்டிடம் மிகுந்த சேதமடைந்து இடியும் நிலையில் உள்ளது ஆய்வு குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும், அப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் அன்னார்களுக்கு சொந்தமான தனி நபர் கழிப்பறையினை பயன்படுத்தி வருகின்றனர். எனவே, மேற்படி பொது கழிப்பிட கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி, பொது மக்கள் பயன் பெறும் வகையில் வணிக உபயோகத்திற்கு ஒரு கடை அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு –** உபயோகத்திற்கு தகுதியற்ற நிலையில் உள்ள பொதுக் கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி அவ்விடத்தில் நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு ஒரு கடை கட்டிட மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.3468/2016/இ1) |
| **5.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தனியார் பள்ளிகள் மற்றும் அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்களில் சுயநிதி படிப்புகளை நடத்திவரும் பட்சத்தில் அந்நிறுவன கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு 2017–2018 –ஆம் இரண்டாம் அரையாண்டு முதல் வரிவிதிப்பு செய்திட சட்ட திருத்தம் செய்து வரப்பெற்ற தமிழ்நாடு அரசிதழ் எண்.33, நாள்:25.01.2018 மன்றத்தின் பார்வைக்கும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அறிவிப்பு வெளியிடவும், உரிய வரிவிதிப்புகள் |

| | |
|---|---|
| | மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1241/2018/எச்1) |

| | |
|---|---|
| 6. | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 22.03.2018–ஆம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் சொத்துவரி கேட்பிற்கு ஏற்றாற் போல் குடிநீர் இணைப்புகள் 31.07.2018–ஆம் தேதிக்குள் வழங்கப்பட வேண்டுமென (Internal Plumping of Water Supply House service connections) அறிவுறுத்தப்பட்டதன்படி, கம்பம் நகராட்சியில் 17842 சொத்துவரி கேட்பின் எண்ணிக்கையின்படி தற்பொழுது வரை 13648 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் 26.03.2018–ஆம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் இந்நகராட்சிக்கு கூடுதலாக 3000 குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க மேற்கண்ட இணைப்புகளுக்கு மதிப்பீடு ரூ.320.00 இலட்சத்திற்கு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : மதிப்பீட்டுத் தொகை ரூ.320.00 இலட்சத்தை TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று மேற்கண்ட பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1490/2018/இ2) |
| 7. | கம்பம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல், சிக்குன் குனியா மற்றும் மலேரியா போன்ற கொசுக்களின் மூலம் பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக 36 DBC பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திக் கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1252, நாள்:30.06.2017–இல் (ஆகஸ்ட் 2017 முதல் ஜுலை 2018 வரை) அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த அக்டோபர் 2017 முதல் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகரித்து வந்த காரணத்தினால் மேலும் 27 DBC பணியாளர்களை ஜனவரி 2018 முதல் மார்ச் 2018 வரை நோய் தடுப்பு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1379 நாள்.15.12.2017–இல் அனுமதிக்கப்பட்டு தற்போது 31.03.2018 உடன் முடிவடைகிறது. மேலும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.2571/2017/ஜே1, 28.11.2017–ஆம் தேதிய கடிதத்தில் வருடம் முழுவதும் 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் DBC பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே நகர்மன்ற தீர்மான எண்.1379 நாள்.15.12.2017–ஆம் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 27 DBC பணியாளர்களை ஜுலை 2018 வரை ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அந்திமல்லி மகளிர் குழுவிடம் பணியாளர்களை பெற்று நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.6,80,000/–க்கு (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1000/2017/எச்1) |

| | |
|---|---|
| **8.** | கம்பம் நகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பைகளை தனியாகவும், மக்காத குப்பைகளை தனியாகவும் தனித்தனியாக பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக்குவதற்காக EM SOLUTION 100 லிட்டர் அரசு அங்கீகாரம் பெற்ற / தனி நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–(ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3136/2017/எச்1) |
| **9.** | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 72 துப்புரவு பணியாளர்கள் பணி செய்து வருகின்றனர். இப்பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறுவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1003/2018/எச்1) |
| **10.** | கம்பம் நகராட்சி பகுதிகளில் உருவாகும் குப்பை கழிவுகளை, துப்புரவு பணியாளர்கள் மூலம் தரம் பிரிக்கப்பட்டு நகராட்சி உரக்கிடங்கில் windrows முறையில் உரம் தயாரிக்கும் பணி நடைபெற்றுவருவதால், தினமும் உருவாகும் கழிவுகளை அந்தந்த பிரிவு பகுதிகளில் அளவீடு செய்வதற்கு 3 எண்ணம் எடை இயந்திரம் (Weighing Machine) வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000/–க்கு (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3136/2017/எச்1) |
| **11.** | அரசாணை (நிலை) எண்.106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:01.09.2014–இல் தெரிவிக்கப்பட்டுள்ள கசடு கழிவு மேலாண்மை வழிகாட்டுதல்களின்படி நகராட்சி பகுதியில் உள்ள வீடுகளில் நச்சுத்தடை தொட்டியில் சேகரிக்கப்படும் கசடு கழிவுகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்க வேண்டும் எனவும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் இல்லாத நகராட்சிகள் அருகில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு செய்ய வேண்டும் என அறிவுறுத்தியதின் அடிப்படையில் இந்நகராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு இல்லாத காரணத்தால் இந்நகராட்சிக்கு கழிவுநீர் உறிஞ்சு வாகனம் மூலம் சேகரிக்கப்படும் நச்சுத்தடை தொட்டியின் கழிவுகளை அருகில் உள்ள சின்னமனூர் நகராட்சியில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேர்க்கவும், அதற்கு சின்னமனூர் நகராட்சி நிர்ணயம் செய்யும் கட்டணத்தை செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேற்காணும் வழிகாட்டுதல்களில் |

| | |
|---|---|
| | தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சி பகுதியில் உள்ள தனியார் கழிவு நீர் உறிஞ்சு வாகனங்களை பதிவு செய்தவற்கு ஆறு மாத காலத்திற்கு பதிவு கட்டணமாக ரூ.5000/– நிர்ணயம் செய்யலாம். நகராட்சியில் பதிவு செய்யப்பட்டாத கழிவுநீர் உறிஞ்சு வாகனங்களை முற்றிலுமாக தடை செய்தும் உத்தரவிடலாம். பதிவு செய்த வாகனங்களை நச்சுத்தடை தொட்டி கழிவுகளை அருகில் உள்ள சின்னமனூர் நகராட்சியின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேர்ப்பிக்கவும், நிபந்தனை விதிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : இந்நகராட்சி கழிவு நீர் உறிஞ்சு வாகனம் மூலம் சேகரிக்கப்படும் கசடு கழிவுகளை அருகில் உள்ள சின்னமனூர் நகராட்சியின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேர்க்கவும், அதற்கு சின்னமனூர் நகராட்சியில் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம். இந்நகராட்சி பகுதியில் இயங்கும் தனியார் கழிவுநீர் உறிஞ்சு வாகனத்திற்கு ஆறுமாத காலத்திற்கான கட்டணமாக ரூ.5000/– நிர்ணயிக்கவும், பதிவு செய்யப்படாத கழிவுநீர் உறிஞ்சு வாகனங்களை இந்நகராட்சி பகுதியில் செயல்படுவதற்கு முற்றிலும் தடை விதிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **12.** | இந்நகராட்சிக்கு சொந்தமான முகைதீன் ஆண்டவர் புரம் பள்ளி வளாகத்தில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி கட்டிடங்களின் சுவர் வெள்ளை வர்ணம் பூச்சு செய்து பல ஆண்டு காலம் ஆவதால் மேற்படி பள்ளி கட்டிடங்களுக்கு வெள்ளை எமேல்சன் வர்ண பூச்சு செய்யவும் மற்றும் நடுநிலைப் பள்ளியின் மேற்கூரை Weathering Course மற்றும் Pressed tiles அமைத்து முகப்பு சன்சைடு அமைத்திட அனுமதிக்கும், மேற்படி பணிகள் செய்திட தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கும் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு** – மாணவர்களின் நலன் கருதி பள்ளி கட்டிடம் மற்றும் வளாகத்தினை தூய்மையாக பராமரிப்பு செய்யும் பொருட்டு கல்வி நிதியில் பணிகளுக்கான செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1155–9/2017/இ1) |
| **13.** | இந்நகராட்சிக்கு பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சீர்செய்யுமாறு கட்டணக்கழிப்பறை ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். மேலும், வார்டு எண்.17, சேனை ஒடை கழிப்பிடம் மிகவும் பழுதாகி உள்ளதை சீர்செய்து தரகோரி பொது மக்கள் கோரிக்கை அளித்துள்ளனர். மேற்படி கழிப்பிடங்களில் ஏற்பட்டுள்ள பழுதினை சீர்செய்யவும், பழுது நீக்கப் பணிக்கு தயார்செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு |

இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – நகராட்சி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பொதுமக்களின் சுகாதார நலன் கருதி பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1155–8/2017/இ1)

**14.** கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019**–இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1421**, நாள் **13.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018**–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 22 வரை 57 இடங்களில் உள்ள தெருவிளக்கு மின் இணைப்புகளில் தானியங்கி நிறுத்திகள் பொருத்தும் பணிகள் செய்தல். | 470000 | எல். இராஜேந்திரன் | – | 0.72 |
| | | | வி.கிருஷ்ணன் | 0.72 | – |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். 1–இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.687/2018/இ2)

**15.** கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019**–இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1422**, நாள் **13.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018**–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 23 முதல் 33 வரை 55 இடங்களில் உள்ள தெருவிளக்கு மின் இணைப்புகளில் தானியங்கி நிறுத்திகள் பொருத்தும் பணிகள் செய்தல். | 455000 | எல். இராஜேந்திரன் | – | 0.72 |
| | | | வி.கிருஷ்ணன் | 0.72 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திப்பீட்டு விலைவிகிதத்தினை விட

| | |
|---|---|
| | குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம்அனுமதிக்கலாம். **(ந.க.எண்.688/2018/இ2)** |

**16.** கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019–**இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1444**, நாள் **28.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018–**இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான சுருளிப்பட்டியில் அமைந்துள்ள குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள 7 மின்மோட்டார்களை, உரிய தொழிற்கல்வி பணியாளர்களை கொண்டு வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்குதல் பணி செய்தல். | 730000 | எல். இராஜேந்திரன் | – | **0.20** |
| | | | வி.கிருஷ்ணன் | **9.13** | – |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். **1–**இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1167/2018/இ2)

**17.** கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019–**இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1437**, நாள் **28.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018–**இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 17 வரை குடிநீர் வழங்கும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் சுலீஸ்வாழ்வு பழுதுகளை சரி செய்தல் | 500000 | எல். இராஜேந்திரன் | – | **0.49** |
| | | | வி.கிருஷ்ணன் | **0.08** | – |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். **1–**இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம்

| | |
|---|---|
| | அனுமதிக்கலாம். (ந.க.எண்.1168/2018/இ2) |

**18.** கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019–**இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1438**, நாள் **28.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018–**இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 18 முதல் 33 வரை குடிநீர் வழங்கும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் சுலீஸ்வாழ்வு பழுதுகளை சரி செய்தல் | 500000 | எல். இராஜேந்திரன் | – | **0.49** |
| | | | வி.கிருஷ்ணன் | **0.80** | – |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். **1–**இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1169/2018/இ2)

**19.** கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019–**இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1440**, நாள் **28.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018–**இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான சுருளிப்பட்டி முல்லை பெரியாற்றில் அமைந்துள்ள குடிநீர் நீரேற்று நிலையத்திற்கு வருடத்திற்கு 10 எண்ணம் கேஸ் குளோரினேசன் சிலிண்டர் விநியோகம் செய்தல் | 255000 | M/s. ஸ்ரீ சத்யா டைஸ் அன்டு கெமிக்கல்ஸ் | – | **0.12** |
| | | | M/s. பீப்பில் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் | **2.91** | – |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். **1–**இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1170/2018/இ2)

| | |
|---|---|
| **20.** | கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019**–இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1436**, நாள் **28.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018**–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள மொத்தம் 88 கைபம்புகளை பழுது மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 100000 | எல். இராஜேந்திரன் | – | **0.08** |
| | | | வி.கிருஷ்ணன் | **0.15** | – |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். 1–இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1171/2018/இ2)

| | |
|---|---|
| **21.** | கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019**–இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1439**, நாள் **28.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018**–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி குடிநீர் விநியோகத்திற்கு தேவையான குளோரின் பவுடர் விநியோகம் செய்தல் | 180000 | M/s. ராஜேந்திரா ஸ்டோர்ஸ் | **0.17** | – |
| | | | M/s. K.M.P.L எலக்ட்ரிக்கல்ஸ் | – | **0.17** |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். 1–இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1172/2018/இ2)

**22.** கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019–**இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1441**, நாள் **28.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018–**இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | நகராட்சி வார்டு எண். 1 முதல் 22 முடியவுள்ள மொத்தம் 171 விசை பம்புகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 925000 | எல். இராஜேந்திரன் | – | **0.11** |
| | | | வி.கிருஷ்ணன் | **0.11** | – |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். **1–**இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1173/2018/இ2)

**23.** கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019–**இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1442**, நாள் **28.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018–**இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23 முதல் 33 முடிய மற்றும் சுருளிப்பட்டி பம்பிங் ஸ்டேஷனில் உள்ள மின் மோட்டார்கள் உட்பட மொத்தம் 124 விசைபம்புகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | 860000 | எல். இராஜேந்திரன் | – | **0.10** |
| | | | வி.கிருஷ்ணன் | **2.48** | – |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். **1–**இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1174/2018/இ2)

**24.** கம்பம் நகராட்சி குடிநீர்நிதித்திட்டம் **2018–2019–**இன் கீழ் பணிகள் செய்திட, நகர்மன்றத் தீர்மானம் எண். **1443,** நாள் **28.02.2018** அனுமதிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட பணி செய்திட நாள்:**28.03.2018–**இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான சுருளிப்பட்டி கேஸ் குளோரினேசன் விநியோகிக்கும் இயந்திரத்தில் ஏற்படும் பழுதுகளை நீக்கி வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 140000 | M/s. ஸ்ரீ சத்யா டைஸ் அன்டு கெமிக்கல்ஸ் | – | மதிப்பீட்டு விலை |
| | | | M/s. பீப்பில் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் | **4.82** | – |

**அலுவலகக் குறிப்பு : –** மேலேகண்ட வரிசை எண். **1–**இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1175/2018/இ2)**

**25.** நகராட்சி நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியரின் 04.09.2017 ஆம் தேதிய கடிதத்தில் கம்பம் நகராட்சி நடுநிலைப்பள்ளி (சுங்கம்) இயங்கி வந்த வாவோர் ஜமாத் கமிட்டிக்கு சொந்தமான கட்டிடம் பழுதடைந்த காரணத்தால் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் ஆகியோரின் உத்திரவு படி மேற்படி பள்ளி மாணவர்கள் தற்போது முகைதீன் ஆண்டவர்புரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள கட்டிடத்திற்கு தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும் மேற்படி நகராட்சி நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு பள்ளி வகுப்பறைகள் அமைத்து தனி கட்டிடம் அமைத்து தரக்கோரப்பட்டுள்ளது.

மேற்படி முகைதீன் ஆண்டவர்புரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தின் அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பிட கட்டிடத்தினை அப்புறப்படுத்திட மூன்றாம் அலுவலரின் ஆய்வு அறிக்கை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள 22.08.2017 ஆம் தேதிய மதுரை நகராட்சிகளின் மண்டல செயற்பொறியாளர் அவர்களின் நேராய்வு அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பிட கட்டிடத்தின் உறுதி தன்மை (Building Stability Report) குறித்து ஆய்வு மேற்கொண்டு 31.10.2017 காணும் போடிநாயக்கனூர், அரசு பொறியியல் கல்லூரியின் ஆய்வு அறிக்கையில் மேற்படி கழிப்பிடத்தினை பொது மக்கள் பயன்படுத்தாத நிலையிலும், கழிப்பிட

கட்டிடத்தில் மரத்தின் வேர் வளர்ந்துள்ளதாலும் கழிப்பிடத்தின் ஸ்திர தன்மைமின்றி எப்போது வேண்டுமானாலும் இடியும் தருவாயில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கழிப்பிடம் அமைந்துள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் தங்களது ஒவ்வொரு குடியிருப்பிலும் தனிநபர் கழிப்பறைகள் கட்டி பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி அவ்விடத்தில் பள்ளிக்கு தேவையான கூடுதல் கட்டிடம் அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** உபயோகத்திற்கு தகுதியற்ற நிலையில் உள்ள பொதுக் கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி அவ்விடத்தில் பள்ளிக்கு தேவையான கூடுதல் கட்டிடம் அமைக்க மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.2306/2017/இ1)

**26.** சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கைகளில் நகர் பகுதியில் சேகரம் ஆகும் குப்பைகளை அப்பகுதிகளிலேயே சிறிய அளவிலான உரம் தயாரிப்பு கலம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி கம்பம் நகர் டி.எஸ்.கே. மனைபிரிவில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட பகுதியின் அருகில் on site composing கலம் அமைத்திடவும், உரம் தயாரிப்பு கலம் அமைத்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2,10,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**27.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1419, நாள்.13.02.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 22.03.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | <u>பொது நிதி 2017–2018</u> நகராட்சி உரக்கிடங்கில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஓய்வு அறை மற்றும் கழிப்பறை மராமத்து பணிகள் | 3,50,000/– | ஏ.பி.கன்ஸ்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், கம்பம் | – | 0.01 |
| | | | ஆர்.சபிர்அலி, ஒப்பந்ததாரர், கம்பம் | 0.61 | – |

**அலுவலகக் குறிப்பு : – 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திருவாளர்கள் ஏ.பி.கன்ஸ்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.01 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| | 2) அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1155–7/2017/இ1) |

| **28.** | இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1420, நாள்.13.02.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 22.03.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
|---|---|

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சி உரக்கிடங்கில் ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் அமைத்தல் மற்றும் உரம் தயாரிப்பு கலத்தினை சுற்றிலும் குழாய் அமைத்து தண்ணீர் வசதி செய்யும் பணி. | 1,50,000/– | எல்.இரோஜேந்திரன் | – | 0.25 |
| | | | வி.கிருஷ்ணன் | 0.36 | – |

**அலுவலகக் குறிப்பு : – 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு எல்.இராஜேந்திரன், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.25 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1155–6/2017/இ1)

**ஒப்பம்/– திரு ந.சங்கரன்,**
ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,
கம்பம் நகராட்சி.

நாள்.**28.03.2018**
இடம். கம்பம்